Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 253/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | ஆறுமுகம் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | காந்தி | சமயம் | - | |
| கிராமம் | - | மணம்பூண்டி | வயது | - | 48 |

21.01.2026

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது மணம்பூண்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியாது. எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை சுமார் 08.00-09.00 மணியளவில் மணம்பூண்டி பெருமாள் கோவில் அருகே போலீசார் வழக்கு சம்மந்தமாக படம் வரைந்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்மந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் கொடுத்த பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம், படம் வரைந்து கொண்டிருந்தார்கள் அதில் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்திலிருந்து கூப்பிட்டு கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, ஸ்பாட்டிலேயே ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், சாட்சி சொல்ல கூப்பிட்டதால் தற்போது சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

2. ஆய்வாளரிடம் கையெழுத்து போட்டதற்கு சாட்சி சொல்ல கூப்பிட்டார்களா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் அந்த இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் அந்த இடத்தில் கையெழுத்து போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் ஸ்பாட்டில் தான் கையெழுத்து போட்டேன்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.